1980 ஜூலை 24]

கோரிக்கை எண் 35.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், கே. எம். தங்கமணி கவுண்டர், என். வரதராஜன், எம். ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—'' மானியக் கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,24,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.34 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

57. தமிழ்நாடு திரையரங்குக் கழகத்தில் 1977-78 ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619-அ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

58. தமிழ்நாடு திரையரங்குக் கழகத்தின் 1978-79 ஆம் ஆண்டிற்கான 7-வது ஆண்டு அறிக்கை (ஆங்கிலம்) [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619-அ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*101. கோரிக்கை எண் 21—மீனளத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1980-81 (தமிழ், ஆங்கிலம்).

@102. கோரிக்கை எண் 35—தமிழகத்தில் உணவு நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, ஜூலை 1980 (தமிழ், ஆங்கிலம்).

*103. 1980-81 ஆம் ஆண்டில் மீனளம் பற்றிய செயல் வினை முறைத்திட்டம் (ஆங்கிலம்).

---

*22—7—1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது.

@21—7—1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது.